## மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 03-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 477/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு.அஜோய் | | |
| த/பெ. | : திரு. செல்வம் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 38 | தொழில் | : |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வாதி வங்கியில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விபரங்கள் பற்றி கோப்பின் அடிப்படையில் எனக்கு தெரியும். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள 06-10-2021 தேதியிட்ட கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும், 06-10-2021 தேதியிட்ட கடன் அனுமதி குறிப்பாணை வா.சா.ஆ.2 ஆகவும், 08-10-2021 தேதியிட்ட சம்மத கடிதம் வா.சா.ஆ.3 ஆகவும், 08-10-2021 தேதியிட்ட கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ.4 ஆகவும், 08-10-2021 தேதியிட்ட வங்கியின் விதிமுறைகள் ஒப்புதல் கடிதம் வா.சா.ஆ.5 ஆகவும், 06-10-2021 தேதியிட்ட ஒப்புதல் கடிதம் வா.சா.ஆ.6 ஆகவும், பிரதிவாதியின் சம்பள பட்டியல் வா.சா.ஆ.7 ஆகவும், பிரதிவாதியின் அடையாள அட்டை வா.சா.ஆ.8 ஆகவும், பிரதிவாதியின் ஆதார் அட்டை வா.சா.ஆ.9 ஆகவும், பிரதிவாதின் பான்கார்டு வா.சா.ஆ.10 ஆகவும், 18-08-2022 தேதியிட்ட வாதி, பிரதிவாதியின் அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.11 ஆகவும், 08-03-2023 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அவரது குடியிருப்புக்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் வா.சா.ஆ.12 ஆகவும், பிரதிவாதி

பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.13 ஆகவும், 08-03-2023 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அவரது அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் வா.சா.ஆ.14 ஆகவும், அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.15 ஆகவும், 13-05-2023 வழக்குரைஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.16 ஆகவும், பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.17 ஆகவும், திருப்பப்பட்ட அஞ்சல் கவர் வா.சா.ஆ.18 ஆகவும், கணக்கு விபர பட்டியல் வா.சா.ஆ.19 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**